# ஒரு வள்ளலின் உதயம்

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று. (கு.236)**

*‘ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமல் இருப்பது நல்லது’*

**உ**லகத்தில் உள்ள நாடுகளில் சிறப்பும், மதிப்பும் பெற்று விளங்கும் ஒரே நாடு, இந்திய நாடாகும். இந்தியா அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்டுப் முழுச் சுதந்திரம் அடைந்து பாரதநாடு என்று விளங்குகின்றது. பெருமை படைத்த பாரத நாட்டில் நிலவளமும், நீர்வளமும், பாடல் பெற்ற புண்ணிய ஸ்தலங்களும், காவிரி ஆறும் கொண்டது தமிழ்நாடு ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் வட ஆர்க்காடு மாவட்டம் - இன்றைய வேலூர் மாவட்டம் சிறப்பு வாய்ந்த சிறந்த மாவட்டமாக விளங்குகின்றது. வடஆர்க்காட்டின் தலைநகரமான வேலூரில் இருந்து ஆரணி என்னும் ஊர்

25மைல் தொலைவில் உள்ளது, ஆரணிக்கு மேற்கு திசையில் சேத்துப்பட்டு என்னும் ஊர் -14 மைல் தொலைவில் உள்ளது. அவ்விடத்தில் இருந்து தென்னார்க்காடு மாவட்டம் பிரிகின்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் சேத்துப்பட்டு என்னும் ஊரில் இருந்து 7வது மைல் தூரத்தில் கோட்டைப்பூண்டி என்னும் ஓர் அழகிய சிறிய கிராமம் உள்ளது.

அவ்வூர் நிறைய மலைகளும், வயலும், பனை மரங்களும், மா மரங்களும், நிறைந்து காணப்படும். சிறிய சிற்றோடைகள் சல சலவென்று ஓடிக்கொண்டு இருக்கும். அவ்வூரின் நடுவில் பொன்னியம்மாள் குளம் என்று ஒரு அழகிய குளம் உண்டு. குளத்தைச் சுற்றி அரசமரமும், வேப்ப மரமும், பூவரசன் மரமும், நாகமரம், ஆலமரம் முதலிய மரங்களும் பூத்துக் குலுங்கும். காற்று சிலு, சிலு என்று எப்பொழுதும் வீசிக் கொண்டே இருக்கும். அவ்வூர் மக்களின் தாகத்தைத் தீர்க்கும் தடாகமாக அமைந்து இருந்தது. தண்ணீர் குடிப்பதற்கு இனிப்பாக மிகவும் சுவையாக அமையப்பெற்று இருந்தது. அதற்கடுத்து அழகிய ஏரியும், கம்பீரமான பெருமாள் கோவிலும், திரௌபதி அம்மன் கோவிலும் அமையப்பெற்று ஒரு அழகிய சிற்றூராம் கோட்டைப்பூண்டி கிராமம் என்று பெயர் பெற்று விளங்கியது.

இயற்கை வளம் பொருந்திய கோட்டைப்பூண்டி கிராமத்தில் வன்னிய மரபினரான சடையப்பபிள்ளை என்பவர் வசித்து வந்தார். கறுத்த மேனியும், பருத்த உடலும், சற்று உயரமாகவும் உருவம் பெற்றவர். மிகவும் நல்லவர், நேர்மையானவர், பெரியவர்களிடத்தில் மரியாதை காட்டுபவர். ஆனால் கொஞ்சம் முரட்டுக் குணம் படைத்தவர். விவசாயக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, விவசாயத்தைத் தொழிலாக செய்து வந்தார்.

முத்தம்மாள் என்னும் புனிதவதியைத் திருமணம் செய்து கொண்டு சொந்த வீடும், நிலமும் வைத்துக் கொண்டு



இல்லறம் இனிது நடத்தி வாழ்ந்து வந்தார். சடையப்ப பிள்ளையின் மனைவி முத்தம்மாள் மிகவும் சிவந்த மேனியும், ஒல்லியான உருவமும், கணவனுக்கு ஏற்ற உயரமுமாக அமைந்து இருந்தார். முத்தம்மாள் தாய் வீடும் கோட்டைப் பூண்டி கிராமமே ஆகும். முத்தம்மாள் மிகவும் தைரியசாலி, அன்பும், பண்பும் அடக்கமும் நிறைந்த மங்கையாவார். கணவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்து விவசாயத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்கள்.

தினமும் அதிகாலையில் 3 மணிக்கு எழுந்திருக்கும் பழக்கமுடையவர். 3 மணிக்குப் பல்துலக்கி, முகம் அலம்பி, கை, கால் சுத்தம் செய்து கொண்டு வீட்டுத் தெரு வாசப்படிக்குச் சென்று சுத்தமாகப் பெருக்கி, சாணம் தெளித்துக் கோலமிடுவார்கள். பிறகு வீடு முழுவதும் கூட்டி, சாணத்தால் மெழுகிச் சுத்தம் செய்த பிறகு பாத்திரத்தைச் சமையல் செய்வதற்குத் துலக்கி, கழுவி வைத்து விடுவார்கள்.

வீட்டின் பின்புறம் கிணற்றடிக்குச் சென்று வருவார்கள். மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, விபூதி பூசி, நூல் ஆடை அணிந்து மகாலட்சுமி போல் வருவார்கள். பிறகு வீட்டிற்கு அருகில், ஊரின் நடுவில் உள்ள பொன்னியம்மாள் குளத்திற்குச் சென்று தலைமேல் தவலையில் தண்ணீர் கொண்டு வருவார்கள். குடிப்பதற்கும் சமைப்பதற்கும் ஊர் மக்கள் குளத்து தண்ணீர்தான் பயன்படுத்துவார்கள். அதிகாலை 4 மணிக்குத் தினமும் குளத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்து சமையல் செய்வார்கள். 5 மணிக்குச் சரியாகச் சமையலை முடித்து விடுவார்கள்.

முத்தம்மாளின் கணவர் தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து தன் சொந்த வயலுக்குச் சென்று வேலைகளை கவனிப்பார். அந்தக் காலத்தில் நிலத்திற்குத் தண்ணீர் இறைக்கப் பம்புசெட் கிடையாது. மாடுகள் பூட்டி,

கவலை இறைப்பது (அ) ஏற்றம் இறைப்பது என்று நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள், வெள்ளிமுளைக்கும் முன் வயல் வேலையில் இறங்கிச் சடையப்பர் வேலை செய்வார்கள்.

முத்தம்மாள் காலை 5 மணிக்கு தனக்கும், தன் கணவருக்கும் ஒரு கூடையில், சமைத்த உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு, தன்னந்தனியாக ஒரு மைல் தெலைவில் உள்ள தன் வயலுக்குத் தலைமேல் சாப்பாட்டுக் கூடையுடன் செல்வார்கள். அந்தக் காலத்தில் காலில் செருப்பு அணியும் பழக்கம் கிடையாது. கருக்கு இருட்டில் கால் தடுக்கி கல் குத்துமாம். முத்தம்மாள் இவ்வாறாக இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு தன் கடமை தவறாமல் வயலுக்குச் சென்று தன் கணவருடன் வயலில் இறங்கி மடைமாற்றுதல், களைபறித்தல், நாற்று நடுதல், விதையிடுதல், அறுப்பு அறுத்தல் உட்பட எல்லா வேலைகளையும் இன்முகத்துடன் செய்வார்கள். வேலை முடிந்து உணவருந்திச் சற்று இளைப்பாறிவிட்டு, வெய்யில் தாழ்ந்து மாலை வரும் முன், வீட்டிற்குச் சமைப்பதற்குக் காய்ந்த தென்னை, பனைமரங்களின் மட்டைகள், சிறுகுச்சிகள், விறகுகள் இவற்றைக் கஷ்டப்பட்டுத் தினமும் சேகரித்துச் சாப்பாடு கொண்டு சென்ற கூடையில் விறகு சுமையும் வைத்துக்கொண்டு அந்தி மாலை 5 மணிக்கு வயலில் இருந்து வீட்டிற்குத் திரும்பி வருவார்கள்.

வீட்டிற்கு வந்து மறுபடியும் சமைப்பதற்குக் குளத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வருவார்கள். அப்பொழுதெல்லாம் பித்தளைப் பாத்திரங்கள் கொஞ்சம் குறைவாக இருக்கும். தேவைக்கு அதிகமாக வீட்டில் சாமான்கள் இருப்பதில்லை. மண்பாத்திரங்களில் தான் சமைப்பார்கள். ஆகவே முத்தம்மாள் தண்ணீர் கொண்டு வந்து சமைப்பார்கள். காலையில் கூழும், களியும், குழம்பும் சமைப்பார்களாம். இரவில் மட்டும் சோறு, கீரைக் குழம்பு, காய்கறிகள் இப்படிச் சமைப்பார்கள். மிகவும் சுவையாக சமைப்பார்கள்.



தன் கணவர் வயல் வேலை முடிந்து முத்தம்மாளுடன் வீட்டிற்கு வந்து கை, கால் அலம்பிக் கொண்டு சமையல் முடிப்பதற்குள் ஊர்க் கோடியில் உள்ள மதுக்கடைக்குச் சென்று கொஞ்சம் சாராயம் குடித்துவிட்டு வருவாராம். அளவோடு உடல் வலிக்காக குடிக்கும் பழக்க முடையவர். வீட்டிற்கு வந்ததும் முத்தம்மாள் சுவையாக மீன்குழம்பு, கருவாட்டுக் குழம்பு இப்படிச் சமைத்து உள்ளதை கணவனும், மனைவியும் உணவருந்திவிட்டுப் படுக்கைக்குச் செல்வார்கள்.

அவர்களின் அன்றாட வாழ்க்கை இவ்விதம் தினமும் நடைபெற்று வந்தது. ஒருநாள் முத்தம்மாள் விடியற்காலை 5 மணிக்கு வயலுக்குத் தனியாகச் சாப்பாட்டுக் கூடையுடன் சென்று கொண்டு இருக்கின்றார். அவர் காதில் தோடும் கழுத்தில் அட்டிகையும், காலில் கொலுசும் அணிந்து இருந்தார்களாம். வானத்தில் பொழுது விடியவில்லை. இருட்டாக இருந்தது. வயல் 1 மைல் தொலைவு உள்ளது. முத்தம்மாள் 1/2 மைல் தொலைவு நடந்து சென்று கொண்டு இருக்கும் போது பின்னால் ஒரு திருடன் போர்வை போர்த்துக் கொண்டு நடந்து வந்து கொண்டு இருக்கின்றான். முத்தம்மாள் 'யார் அது?' என்று பின்னால் திரும்பிக் குரல் கொடுத்தார்; திருடன் பதில் கொடுக்கவில்லை.

எனவே பின்னால் வரும் உருவம் திருடன்தான் என்று புரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் சிறிதும் பயப்படாமல் தன் சமயோசித புத்தியால் வழியில் ஒரு சிறுகுன்றின்மீது ஏறி நின்று கொண்டு 'டேய் முனியா, கந்தா, வீராசாமி! சீக்கிரம் ஓடி வாங்க, நான் வீட்டில் இருந்து வந்து விட்டேன்'' என்று உரக்கக் கூவினார்கள். கொஞ்ச நேரம்

அந்தக் குன்றின் மீது உட்கார்ந்து இருந்துவிட்டு கீழே இறங்கி வந்து பார்த்தார்களாம். தன்னைப் பின் தொடர்ந்து வந்த உருவம் காணவில்லையாம். பிறகு தைரியமாக நிலத்திற்குச் சென்று கணவரிடம் விவரத்தைக் கூறினார்களாம். மனைவியின் தைரியத்தையும் சமயோசித புத்திக் கூர்மையையும் நினைத்தும், கேட்டும் சந்தோஷமடைந்து மனைவியைப் பாராட்டினாராம்.

கணவனும், மனைவியும் கருத்து ஒருமித்து இனிது வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறாகத் திருமணம் ஆகி வாழ்க்கை நடத்தி வருடங்கள் ஓடிக்கொண்டு இருந்தன. 10 வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் புத்திரபாக்கியம் வாய்க்கவில்லை. முத்தம்மாள் குழந்தை பிறக்கவில்லையே என்று மிகவும் மனம் வருந்தினார்கள். கடவுள் மீது நம்பிக்கை வைத்துப் பயபக்தியுடன் பூஜை செய்து வந்தார்கள். திருவண்ணா மலைக்குச் சென்று குழந்தை வரம் வேண்டி, கணவனும், மனைவியும் கால் நடையாக மலையைச் சுற்றிக் கிரிவலம் வந்தார்களாம். தினமும் காலையில் குளித்ததும் ஈரப்புடவையுடன் கோட்டைப்பூண்டி கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று சுற்றி வருவார்களாம்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் விரதம் இருந்து அரசமரம் சுற்றி வருவார்களாம். அன்று சோமவாரம் வீட்டில் பூசை அறையில் தரையை மெழுகி நடுவீட்டில் சாமிக்குப் படைத்துவிட்டு தரையில் உள்ள சோற்றை இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக்கொண்டு மண்டியிட்டு முன்புறமாகக் குனிந்து தலையைத் தாழ்த்தி வாயாலேயே அந்தச் சோற்றைக் கவ்விச் சாப்பிடுவார்களாம்.

அவ்வாறு ஒவ்வொரு திங்கட்கிழமையையும் செய்து வந்தால் குழந்தை பிறக்கும் என்று பயபக்தியுடன் செய்து வந்தார்கள். மடியில் பிள்ளை வந்து படுக்கும் என்று சில வீட்டில் மடிப்பிச்சை வாங்கி வருவார்களாம். இப்படியாகப் பிள்ளைவரம் வேண்டிக் கடும் தவம் இருந்து வந்தார்கள். முத்தம்மாளின் தவத்தை ஏற்றுக்கொண்டு ஆண்டவன் அருள்புரிந்தார். முத்தம்மாளின் மணி வயிறு மகப்பேறு வாய்த்தது. முத்தம்மாள் கருத்தரித்ததும், கணவனும், மனைவியும் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள். கடவுளின் அருளை நினைத்து நன்றியுடன் வழிபட்டார்கள். கருவுற்ற சமயத்திலும் முத்தம்மாள் வீட்டு வேலைகளையும் வயல் வேலைகளையும் கவனித்து வந்தார்கள்.



10 மாதம் பூர்த்தியானது. எல்லாம் வல்ல இறைவன் அருளால் நல்ல நாளில், சூரிய உதயாதி கோழி கூவும் விடியற்காலையில் வீட்டில் சுகப்பிரசவமாக ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. முத்தம்மாளுக்குப் பெரு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. தான் தவமிருந்து பெற்ற தவப்புதல்வனான தலைமகனுக்குத் திருவண்ணாமலையில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் திரு அருணாசலேசுவர் பெயரையே வைக்க வேண்டும் என்று கருதினார்.

அவர் அருளால் பிறந்த குழந்தை இது என்று கூறி ஒரு நல்ல நாளில் தன் மகனுக்கு அருணாசலம் என்று திருப்பெயர் சூட்டினார்கள். முத்தம்மாள் சிவந்த மேனியுடையவர்கள், சடையப்பர் கறுத்த மேனியுடையவர். குழந்தை கணவனைப்போல் கறுத்த மேனியுடன் மூக்கும் முழியுமாக கொழு, கொழு வென்று இருந்தது, முத்தம்மாள் உறவினர்களிடம், ''கறுப்பு நிறம் ஆயிரம் பொன் கொண்டது! பரவாயில்லை! என் மகன் அதிர்ஷ்டசாலி!'' என்று விட்டுக் கொடுக்காமல் பெருமையுடன் பேசுவார்களாம். நாள் கடந்து பிறந்த குழந்தையாதலால் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகத் தாலாட்டிச் சீராட்டி அன்போடு வளர்த்து வந்தார்கள். சடையப்பரும் குழந்தையைப் பார்த்துப் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒருநாள் முத்தம்மாளும், கணவரும் குழந்தையை நிலத்திற்குத் தூக்கிச் சென்று புல் தரையில் துணி பரப்பிப் படுக்க வைத்து விட்டு முத்தம்மாள் வயலில் இறங்கிப்பயிர் வேலையை கவனித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது ஒரு சிறிய பாம்பு குழந்தையின் கால் பெருவிரலில் கடித்து விட்டுச் சென்று விட்டது. இதை சடையப்பர் கவனித்து விட்டார். பதறித் துடித்து தன் மனைவியை உரக்கக் கூவி அழைக்கின்றார். ‘முத்தம்மா நம்ம மகனைப் பாம்பு கடித்துவிட்டது. ஓடி வா’ என்று கூப்பிடுகின்றார். தன் கணவரின் இந்தக் குரலைக் கேட்டதும் வயலில் வேலை செய்வதை விட்டு விட்டு ஓடி வந்து தன் மகனை தோள் மேல் தூக்கிப் போட்டுக் கொண்டு வெகுவேகமாக ஊரில் உள்ள நாட்டு வைத்தியரிடம் ஓடிச் சென்றார். பின்னால் அவர் கணவர் மனைவியின் வேகத்திற்கு ஓடமுடியாமல் மூச்சு வாங்க ஓடிச்சென்று வைத்தியர் வீட்டை அடைந்தார்.

முத்தம்மாள் வைத்தியரிடம் குழந்தையைக் காண்பித்து ‘ஓ’ என்று கதறி அழுதார்களாம். வைத்தியர் முத்தம்மாளின் உறவினர் ஆவார். ஆதலால் வைத்தியரைப் பார்த்து ‘‘மாமா என் பிள்ளையைத் தவம் இருந்து பெற்றேன். அவன் உயிரை காப்பாற்றித் தரவேண்டும். தராவிட்டால் உங்கள் காலடியிலேயே என் உயிரை விட்டு விடுவேன்!’’ என்று துடி, துடித்துக் கதறிக் கண்ணீர் விட்டு அழுதார்கள். உடனே வைத்தியர் சமாதானப்படுத்திப் பச்சிலை மருந்து கொடுத்து, கண்ணில் கலிக்கம் போட்டு, ஒரு மணி நேரம் வைத்திருந்து குணமாக்கிக் குழந்தையை முத்தம்மாளிடம் கொடுத்தாராம். இறைவன் அருளாலும், வைத்தியரின் முயற்சியாலும் தன் குழந்தை பிழைத்தது என்று மகிழ்ச்சியடைந்து குழந்தையை உச்சி முகர்ந்தனர்.

மார்போடு அணைத்துக் கொண்டு, தன் மாமா வைத்தியருக்கு நன்றி கூறி அவர் காலில் விழுந்து வணங்கி



விடை பெற்று வீடு திரும்பினார்கள் கணவனும் மனைவியும்! அதன் பிறகு 5 வருடங்கள் கழித்து ஒரு மகன் - இளைய மகனைப் பெற்றெடுத்தார்கள். குழந்தை முத்தம்மாளைப் போல சிவப்பாக இருந்தது. குழந்தைக்கு வெள்ளையன் என்று பெயரிட்டனர். அதன் பிறகு சில வருடங்கள் கழித்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தை தன் தந்தையைப் போல் மிகவும் கறுப்பாக இருந்தது. அந்தப் பெண் குழந்தைக்கு வீட்டுத் தெய்வத்தின் பெயரான பச்சையம்மாள் என்ற பெயரைச் சூட்டினார்கள். சடையப்பரும் முத்தம்மாளும் மூன்று குழந்தைகள் முத்தாக பிறந்துள்ளது என்று திருப்தியடைந்து அத்துடன் நிறுத்திக் கொண்டார்கள்.

குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்டு, மனம் பூரித்து வாழ்ந்து வந்தார்கள். தன் மூத்த மகன் அருணாசலம் 5 வயது நிரம்பியவுடன், மகனைப் பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க வேண்டும் என்று கணவரிடம் முத்தம்மாள் கூறினார்கள். அதற்குச் சடையப்பர் மனைவியிடம் நம் மகன் படிக்கக் கூடாது. நம் சாதியில் யாரும் படிப்பதில்லை. அப்படி யாராவது படித்தால், இறந்து விடுவார்கள்’’ என்று சொல்லித் தன் மகனைக் கண்டிப்பாகப் படிக்க வைக்கக்கூடாது என்று பிடிவாதமாகக் கூறிவிட்டாராம். தன் மகன் ஆடு, மாடு மேய்க்கட்டும் என்று ஆடுகள் வாங்கிவிட்டாராம். ‘‘அந்தக் காலத்தில் யாரும் நாங்கள் படிப்பதில்லை. குழந்தை பெரியவன் ஆனதும் ஆடு, மாடுகள் மேய்த்துக் கொஞ்சம் பெரியவன் ஆனதும் வயல் வேலைகளைக் கற்றுக் கொண்டு வேலைகள் செய்வார்கள் என்று கூறிவிட்டாராம். முத்தம்மாள் மிகவும் மனம் வருந்தி கணவரிடம் அழுது முறையிட்டார். ‘‘எதையோ மூடப்பழக்கமாகச் சொல்கின்றீர்களே, இன்னும் அதையே கடைப்பிடித்து நாம் வாழ வேண்டுமா? நம் குழந்தை படிக்காமல் முட்டாளாக வளர்ந்து இறப்பதை விட படித்து நாலு எழுத்து கற்றுணர்ந்து, அவன் வாயால் வாசித்து விட்டு இறப்பது மேல்’’ என்று கூறினார்.

கணவன் இந்தக் கேள்விக்குப் பதில் கூறவில்லை. பேசாமல் இருந்துவிட்டார். அவருக்கும் ஆசை ஒரு பக்கம். பழைய கட்டுப்பாடுகள் பயம் ஒரு பக்கம்! எனவே ஆடுகள் மேய்க்கட்டும் என்று கூறி விட்டார். முத்தம்மாள் துணிந்து வருவது வரட்டும் என்று கடவுள் மேல் நம்பிக்கை வைத்து குழந்தையைப் படிக்க வைப்பது என்று முடிவு செய்து விட்டார். ஊரில் வாரம் ஒருமுறை சந்தை கூடும். சந்தைக்குச் சென்று தன் மகனுக்குப் புதுத்துணி வாங்கி வருவார். பள்ளிக்கு எடுத்து செல்லப் பலகையும், அரிச்சுவடியும் வாங்கி வருவார். வளர்பிறையில் ஒரு நல்ல நாளில் குழந்தைக்குப் புதுத் துணி அணிவித்து, பலகை, அரிச்சுவடியைக் கொடுத்து ஊரில் உள்ள பள்ளிக்கு அழைத்துச் சென்று ஆசிரியரிடம் சொல்லிப் பிள்ளையைப் பள்ளியில் சேர்த்துவிட்டு மனத்திருப்தியுடன் வீட்டிற்கு வந்தார்கள். ஆடுகள் மேய்ப்பதற்காக ஒரு ஆளை கூலிக்கு நியமித்துத் தினமும் ஆடு மேய்க்க ஏற்பாடு செய்து விட்டார்கள். கணவர் அந்திப் பொழுது சாய்ந்து வீட்டிற்கு வருவதற்குள் மகனைப் பள்ளிக்கூடத்தில் இருந்து அழைத்து வந்து விடுவார்கள். ஆடுகளைக் கூலிக்காரன் மேய்த்துவிட்டு வீட்டுப் பட்டியில் அடைத்து விட்டு போய்விடுவான். இவ்வாறே தினமும் நடந்து கொண்டு இருந்தது.

கணவன் வீட்டிற்கு வந்ததும் மகன் ஆடு மேய்த்து முடித்து பட்டியில் அடைத்துள்ளான் என்று நினைத்துக் கொள்வார். வெகு நாள் தன் மகன் படிப்பது சடையப்பருக்குத் தெரியாது. சமயம் பார்த்து முத்தம்மாள் பக்குவமாக சமாதானப்படுத்துவார்கள். சடையப்பர் உள்ளுக்குள் தன் மனைவியை மெச்சிப் பூரிப்பார்.

முத்தம்மாள் தன் வயலில் வேலை இல்லாத சமயத்தில் மற்ற வயல்களுக்குச் சென்று வேலை செய்வார்கள், சில வீடுகளில் நெல் உரலில் இட்டு கூலிக்குக் குத்துவார்களாம். இவ்வாறு நெல் குத்தி, பயிர் வேலை செய்து



அதில் வரும் பணத்தைக் குழந்தைகளுக்காகச் சேர்த்து வைத்தார்கள். முத்தம்மாளின் அக்காள் வேலூரில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஊருக்கு வரும்போது பணம் கொடுத்து வேலூரில் இருந்து அழகான ரெடிமேட் சட்டைகள் வாங்கி வரச் சொல்வார்கள். தன் மகனுக்குத் தீபாவளி, பொங்கல் பண்டிகைக்கு அணிவித்து அழகு பார்ப்பார்கள்.

அருணாசலம் பள்ளிக்கூடத்தில் வாத்தியார் இடத்தில் மிகுந்த தெய்வ பக்தியுடன் பழகுவார். தனக்குக் கல்வி கற்பிக்கும் ஆசானைத் தெய்வமாக மதிப்பார்.

படிப்பிலும் சிறந்த மாணவனாக இருந்தார். அதனால் ஆசிரியரிடத்தில் அருணாசலத்திற்கு மிகுந்த அன்பும், பாராட்டுதலும் கிடைத்தது. அருணாசலம் பள்ளிக்கூடத்தில் ஒரு விழா நடந்தது. அப்போது மூன்றாம் வகுப்பு படித்தார். மாணவர்கள் அனைவரும் விழா நாள் அன்று பாட்டுப்பாடி கோலாட்டம் போட்டு வீதியில் ஊர்வலம் வந்தனர். அதில் அருணாசலம் முன்வரிசையில் நின்று கொண்டு அழகாக கோலாட்டம் போட்டு பாடிக் கொண்டு வந்தார். ஆசிரியர்கள் உடன் வந்தனர். இந்தக் காட்சியை முத்தம்மாள் தன் வீட்டு திண்ணையில் ஏறி நின்று கொண்டு தன் மகனைப் பார்த்து எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார்கள். மாணவர்கள் வீதி, வீதியாக ஊர் முழுவதும் சுற்றி வந்தார்கள். அருணாசலம் மெதுவாகக் கோலாட்டம் போட்டார். இதைப் பார்த்து விட்ட ஆசிரியர் அருணாசலத்தை கோலாட்டம் போடவேண்டாம் என்று சொல்லித் தன் தோள் மீது உட்கார வைத்துக் கொண்டு மீதி வீதிகளில் ஊர்வலம் வந்தார்.

அருணாசலமோ தன் ஆசிரியர் தோள் மீது உட்காருவதா என்று அஞ்சி, ‘‘வேண்டாம் சார், நான் மெதுவாக நடந்து வருகின்றேன்’’ என்றார். அதற்கு ஆசிரியர்

''வேண்டாமப்பா! உன் பாதங்கள் சிவந்து வீங்கிவிட்டது. பரவாயில்லை நான் தூக்கி வருகின்றேன், பேசாமல் இரு'' என்று சொல்லிவிட்டார். அருணாசலம் தன் ஆசிரியரின் அன்பைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார். ஊர்வலம் முடிந்ததும் தோள் மீதே வீடு வரை தூக்கிச் சென்று முத்தம்மாளிடம் ஒப்படைத்து விட்டுக் ''குழந்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள். வெந்நீர் ஒத்தடம் கொடுங்கள். கால் குணமானதும் பள்ளிக்கு அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார். முத்தம்மாள் அந்த ஆசிரியருக்கு நன்றி கூறினார்.

தன் மகனுக்குத் தன் கண்ணடியே பட்டு விட்டது என்று புலம்பினாள். மகனுக்கு மூன்று வீட்டு கூரைகளின் மஞ்சுகளைக் கொண்டு வந்து, மிளகாய் வைத்து திருஷ்டி சுற்றினாள். கொஞ்சம் கூட மிளகாய் நெடி வரவில்லை. என் மகனுக்கு என் கண்ணும், ஊர் கண்ணும் பட்டுவிட்டது என்று பக்கத்தில் உள்ளவர்களிடம் கூறினாள். தன் மகனுக்கு உடம்பு, கை கால் எல்லாம், வலிக்கும் என்று உடனே அடுப்பை மூட்டி வெந்நீர் காய வைத்துக் குழந்தைக்குக் கை, கால்களை உருவி வெந்நீர் ஊற்றிக் குளிப்பாட்டினாள். சுடசுடச் சோறு சமைத்து ஊட்டி, தூங்கவைத்தாள்.

தன் கணவர் இரவு வீட்டிற்கு வந்ததும் தன் மகனுக்கு நடந்ததைக் கூறி ஆசிரியர் 'தோள்மீது தூக்கி வந்து விட்டதைச் சொல்லி வருந்தினாள். பள்ளிக்கூடத்தில் அப்பொழுது எல்லாம் அவ்வளவாக பலகை, பலப்பம் கிடையாது. சில சமயம் ஓலையில் ஆணி எடுத்து எழுத வேண்டும்.

தரையில், மணலில் விரலால் எழுத வேண்டும். இவ்வாறாகப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். முத்தம்மாளின் மகன்கள், அருணாசலத்தின் தம்பியும் உடன் பள்ளிக்குச் சென்று வந்தான். இரண்டு மகன்களும் பள்ளிக்குச் சென்று வருவார்கள். குழந்தை பச்சையம்மாள் வீட்டில் இருப்பாள். பெண் பிள்ளைகளை பள்ளிக்குக் கண்டிப்பாக அனுப்புவது இல்லை. அருணாசலமும், வெள்ளையனும் பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்ததும். முத்தம்மாள் ஒரே பெரிய தட்டில் சோறு போட்டு குழம்பு ஊற்றி விடுவார்கள். அருணாசலமும், அவன் தம்பியும் சாப்பாட்டு தட்டின் முன்னால் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டு சாப்பாட்டில் நடுவில் ஒரு கோடு போட்டு ஆளுக்குப் பாதி என்று சாப்பிடுவார்கள். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது தம்பி, அடியில் கையால் தள்ளி, தள்ளி அண்ணன் பாகத்தில் உள்ள சோற்றைத் தன் பக்கம் தள்ளிக்கொள்வார். இருவரும் பேசி, சிரித்துக்கொண்டு சாப்பிடுவார்களாம். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது தம்பி அடியில் கையால் தள்ளி, தள்ளி அண்ணன் பாகத்தில் உள்ள சாதத்தை தன் பக்கம் தள்ளிக்கொள்வாராம். இருவரும் பேசி, சிரித்துக்கொண்டு சாப்பிடுவார்களாம். அருணாசலம், 'பாவம் தம்பிக்கு அதிக பசி போலும்'' என்று நினைத்துக் கண்டும், காணாமல் சாப்பிடுவாராம். தன் தம்பியின் மீது அவ்வளவு பாசம், இந்தக் குறும்புத் தனத்தை தாயிடமும் சொல்லமாட்டாராம்.

முத்தம்மாள் அசைவ உணவு சமைக்கும் போது அருணாசலத்துக்கு ஊட்டினால் கீழே துப்பி விடுவாராம், வீல் என்று கத்துவாராம். சாப்பாடு வேண்டாம் என்று அழுவாராம். இது முத்தம்மாளுக்கு புரியவில்லையாம். சைவ உணவு சமைத்த அன்று நன்றாகச் சாப்பிட்டு விடுவாராம். இயற்கையாகவே, யாரும் சொல்லாமல் அவருக்கு அசைவ உணவு பிடிக்காமல் சைவ உணவை விரும்பிச் சாப்பிட்டு வந்தார். விவரம் தெரிந்த பிள்ளையாகிப் பள்ளி விட்டு வந்ததும் சாப்பிட உட்காருகின்றார். தாய் தட்டில் சாதம் போட்டு, கறிக்குழம்பை ஊற்ற வருகின்றார். மகன், ''தயவு செய்து வேண்டாம் அம்மா!'' என்று சொல்லிவிட்டுச் சாதத்தில் தண்ணீர் ஊற்றி, உப்பு போட்டுச் சாப்பிட்டு விட்டுச் செல்கின்றார். தன் தாயிடத்தில் எந்தக் கடினமான வார்த்தையும்

சொல்லி அடம்பிடிப்பதில்லை. அடிக்கடி மாமிசக் குழம்பு வைக்கும் போது எல்லாம் அருணாசலம் பேசாமல் தண்ணீர் ஊற்றி உப்பு போட்டுச் சாப்பிட்டுச் சென்று விடுவாராம்.

இதைப்பார்த்த முத்தம்மாள் தன் மகன் தெய்வாதீனமாக, தானே சாப்பிட மறுக்கும் பொழுது நாம் வற்புறுத்தக்கூடாது. குழந்தை இப்படி அடிக்கடி தண்ணீர் சோறு சாப்பிடுகின்றான் என்று வருத்தப்பட்டுத் தனியாக சைவக் குழம்பு சமைத்து வைப்பார்கள். அருணாசலம் இளமை முதல் தாய், தந்தையிடத்தில் அன்பும், பாசமும் வைத்து நடந்து கொள்வார். கடவுள் பக்தி உடையவர், குரு பக்தி மிகுந்தவர். ஆசிரியர் சொல்லும் வேலையைத் தலை மேல் ஏற்று செய்துமுடிப்பார். பள்ளியில் படிக்கும் சக மாணவர்களிடத்திலும் அன்போடு பழகுவார். அந்தக் கிராமத்தில் அப்போது 5 வது வகுப்பு வரையில்தான் பள்ளிக்கூடம் நடைபெற்று வந்தது. அருணாசலம் 5ஆம் வகுப்பு படித்து முடித்ததும், முத்தம்மாள் வேலூரில் உள்ள தன் தமக்கை வீட்டிற்கு அழைத்து வந்து தங்கும்படிச் செய்தார். தன் அக்காவிடம் என் மகனை மளிகைக் கடையில் பொறுப்பாக விட்டுக் ''கணக்குகள் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவும், என் பிள்ளை சாப்பாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருட்கள் மாதம் ஒருமுறை நான் கொண்டு வந்து கொடுக்கின்றேன்'' என்று கூறி விட்டு, மகன் அருணாசலத்திடம், 'மகனே நீ நன்றாக கணக்குகள் கற்றுக்கொண்டு, பெரியம்மா வீட்டில் கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறி உச்சி முகர்ந்து பிரியாவிடை பெற்றுச் செல்கின்றார்கள். ஒவ்வொரு மாதமும் தன் மகன் சாப்பாட்டிற்காக அரிசி, பருப்பு, புளி, காய்கறிகள் கொண்டு வந்து கொடுத்துவிட்டு மகனைப்பார்த்துவிட்டுச் செல்வார்கள். அருணாசலம் பகல் முழுவதும் மளிகைக் கடையில் வேலை செய்துவிட்டு மாலை 6 மணிக்கு வீடு திரும்புவார்.



6 மணியிலிருந்து இரவு 7 மணி வரையில் பஜனை கோவிலில் ஒரு பாடகரிடம் தேவாரம், திருவாசகம் கற்றுக்கொள்வார். பிறகு வீட்டிற்கு வந்து 7 மணியிலிருந்து 8 மணி வரையில் 6ம் வகுப்பு புத்தகங்களை வீட்டிலிருந்தே படித்து வருவாராம். பிறகு 8 மணிக்கு எழுந்து குளித்துவிட்டுப் பெரியம்மாவுக்கு உதவி செய்வாராம். பிறகு மளிகைக் கடைக்குச் சென்று விடுவார். இவ்வாறுதான் காலம் கடந்து சென்றது, தன் தாயார் கைச் செலவுக்காக, வரும்பொழுது ஒரு ரூபாய் கொடுத்து விட்டுச் செல்வார்கள். மளிகைக் கடையில் தினமும் வேலை முடிந்து திரும்பும்பொழுது (50 பைசா) எட்டணா கொடுப்பார்களாம். அந்தக் காசுகளை வீண், செலவு செய்யாமல் கண்ணும் கருத்துமாகச் சேர்த்து வைத்துத் தனக்கு 1/2 அரைக்கால் சராய், சர்ட், துணி எடுத்து தைத்துப் போட்டுக் கொள்வாராம். அப்பொழுது விலைவாசி மிகவும் மலிவாக இருக்குமாம். எந்தப் பொருளும் தம்பிடி என்னும் நாணயத்துக்கு கிடைக்குமாம். அம்மாவிற்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. கிராமத்தில் எப்படி கஷ்டப் படுகின்றார்களோ என்று நினைத்துத் தனக்காக அவர் பணம் கேட்பதில்லையாம். தனக்குத் தேவையானதை அந்த எட்டணா சம்பளத்தைச் சேர்த்து வைத்து வாங்கிக் கொண்டு மீதி காசுகளைச் சேர்த்து வைப்பார்.

வேலூரில் இருந்து யாராவது உறவினர்கள் ஊருக்குச் செல்லும் போது, அம்மாவுக்கு வெற்றிலைப் பாக்கும், தங்கைக்குப் பூவும் வாங்கி அனுப்புவாராம். அருணாசலம் 10 வயது ஆனதும் மளிகைக் கடையில் கணக்குகள் கற்றுக் கொண்டது போதும் என்று நின்றுவிட்டார். தான் தங்கி இருக்கும் பெரியம்மாவின் கணவர் நாராயணசாமி கவுண்டர் ரொட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார். பெரியப்பா அவர் கடையில் வேலை செய்யும்படி சொல்லவே, அவ்வாறே பெரியப்பா கடையில் வேலை செய்துகொண்டு அவர் வீட்டில் தங்கி வந்தார். வாரம் ஒரு ரூபாய் ஊதியமாகக் கொடுப்பாராம்.

மிகவும் கடினமான வேலைகள் செய்ய வேண்டுமாம். காலையில் 4 மணிக்கு எழுந்து கடைக்குப் பெரியப்பா உடன் அழைத்துச் செல்வாராம். அப்பொழுதெல்லாம் மாவு பிசைவதற்கு மிஷன் கிடையாது. மாவைக் கையினால் நன்றாகத் தண்ணீர்விட்டுப் பிசைய வேண்டும். இதற்கு மாசி அடித்தல் என்று பெயர். மாசி அடித்து ரொட்டி, பண், பிஸ்கட்டுகள், செய்ய வேண்டும்.

இவை தயார் ஆனதும் தலை மேல் கூடையில் சுமந்து சென்று வாடிக்கைக் கடைக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டுக் காசு வாங்கி வர வேண்டும். பிறகு பக்கத்தில் உள்ள ஊர்களுக்கு நடந்தே போக வேண்டும், பஸ் வசதி கிடையாது. அங்குள்ள கடைகளுக்குச் சரக்கு கொடுத்துவிட்டு வர வேண்டும். ரயில் வசதி மட்டும் உண்டு. ஒருநாள் கூட ஓய்வு இருக்காது. பகல் 3 மணிக்கு ஒரு பெரிய கூடையில் ரொட்டியை அடுக்கி எடுத்துக் கொண்டு காட்பாடி ரயில்வே ஸ்டேஷனில் விற்றுவிட்டு வரவேண்டும் என்று பெரியப்பா அனுப்பி வைப்பார். அதற்காகக் கட்டை வண்டியில் செல்வதற்கு அரை அணா கொடுத்து அனுப்புவார் பெரியப்பா. அருணாசலம் அந்தக்காசை வண்டியில் வரப் பயன்படுத்தாமல் நடந்தே தலைமேல் தூக்கி சென்று விற்று விட்டு வருவார். மாலை 6 மணிக்கு ரொட்டி விற்று முடிந்ததும் கால் அணாவுக்கு திண்பண்டம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு நடந்தே வீட்டிற்கு வந்து விடுவாராம். மீதி காலணாவை அப்படியே சேர்த்து வைப்பாராம். ஞாயிற்றுக்கிழமை 1/2 நாள் லீவு கொடுப்பார்களாம். அந்த 1/2 நாள் அவருக்கு மகிழ்ச்சியாக இருக்குமாம்.

அன்று தலை முடி வெட்டிக் கொள்வார். துணி சோப்பு வாங்கிக் கொண்டு தன் அழுக்குத் துணிகளை எல்லாம் சேர்த்து மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு பாலாற்றில் சென்று நன்றாகத் துணிகளை துவைத்து, உலர்த்திக் குளித்து



விட்டு மாலை வீடு திரும்புவாராம். திரும்பும்போது இருட்டி விடுமாம். பயமாக இருக்குமாம். பயம் தெளிவதற்காக ஏதாவது பாட்டு பாடிக் கொண்டே வீடு வந்து சேர்ந்துவிடுவாராம். சில வாரத்தில் நண்பர்களும் உடன் சென்று வருவார்களாம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இவ்வாறே செய்து வருவார். மற்ற நாட்களில் கடும் வேலைகள் இருக்கும். பாடுபட்டுச் சேர்த்து வைக்கும் பணத்தைத் தாயிடம் கொடுத்து விடுவாராம். தாய் ''உடம்பை கவனித்துக்கொள். அதிக சிரமம் வேண்டாம்!'' என்பார்கள்.

அருணாசலம் சிறுவயதில் குடுமி வைத்து இருந்தாராம். வேலூர் வந்து தன் 12வது வயதில் குடுமி எடுத்துக் கிராப்பு வெட்டிக் கொண்டார். அருணாசலத்திற்கு வயது 16 ஆகின்றது. முத்தம்மாள் தன் மகனுக்குப் பெண் பார்க்க ஆரம்பிக்க வேண்டும். அதற்குள் தன் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று விரும்பி, கோட்டைப்பூண்டி கிராமத்தில் இருந்து 10 மைல் தொலையில் கணப்பாவரம் என்னும் கிராமத்தில் வசிக்கும் தன் சித்தப்பா மகனுக்குத் திருமணம் பேசி முடிவு செய்தார்கள். மணமகன் பெயர் சின்னையா, முத்தம்மாவின் மகளுக்கு வயது 7. பாவாடை, சட்டை அணிந்த பெண், புஷ்பவதியும் ஆகவில்லை. அந்த 7 வயது சிறுமி பச்சையம்மாளுக்குக் கோட்டைப்பூண்டி கிராமத்தில் உள்ள தன் வீட்டில் திருமணம் நடக்கின்றது.

தங்கை பச்சையம்மாளின் திருமணத்திற்காகப் புதுப்பாவாடை, சட்டை, தாவணி எல்லாம் வாங்கி வந்து அன்போடு கொடுக்கின்றார் அருணாசலம். அதை முத்தம்மாள் தன் மகளுக்கு அணிவித்ததும் அசல் பொம்மை மாதிரி இருந்தது என்று தாய்பூரிக்கின்றாள். சிறப்பாகக் கன்னிகாதானம் திருமணம் முடிந்து மாமியார் வீட்டுக்குப் பெண்ணை அனுப்பி வைக்கின்றார்கள். அருணாசலத்திற்குக் கோட்டைப்பூண்டியை



*தங்கை*
*பச்சையம்மாள்*

விட சிறிய கிராமத்தில் பெண் பார்க்கிறார்கள். கொட்டாவூரில் சாதாரண, விவசாய குடும்பம். திரு. நாராயணசாமி, பூங்காவனத்தம்மாள் தம்பதிகளுக்குச் செல்வி உண்ணாமுலை என்ற மகளும், கோபால் என்ற மகனும் இருந்தார்கள். செல்வி உண்ணாமுலைக்கு 10 வயது ஆகின்றது. மிகவும் அதிக சிவப்பாகவும், அழகு தேவதையாகவும் மூக்கும் முழியுமாகவும், தங்கச்சிலை போல் இருப்பார்கள். முத்தம்மாள் தன் கணவருடன் கொட்டாவூர் கிராமத்திற்குப் பெண் பார்க்க திரு. நாராயணசாமி வீட்டிற்குத் தெரிவித்துவிட்டுச் செல்கின்றார்கள். பெண் பார்க்கும் படலம் ஆரம்பிக்கின்றது. செல்வி உண்ணாமுலை அழைத்து வரப்படுகின்றாள். டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கின்றார்கள். முத்தம்மாள் பெண்ணைப் பார்க்கின்றார்.



# திருமணம்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. (கு.45)**

*‘இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்’*

**ம**காலட்சுமியே எதிரில் வந்து நிற்பது போல் காண்கின்றார்களாம். கனவா, நனவா என்று நினைத்தார்களாம், இவ்வளவு அழகான பெண்ணைப் பார்த்து எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார்களாம், தன் கணவரிடம் இந்தப் பெண் தான் எனக்கு மருமகளாக வர வேண்டும். இனி வேறு பெண் நான் பார்க்க மாட்டேன் என்று உறுதியுடன் கூறினார்களாம். சடையப்பரும் எனக்கும் பரிபூரண சம்மதம் என்றார். உண்ணாமுலை படிக்கவில்லை. நல்ல குணமும் பண்பும், மரியாதையும், கனிவும் பேரழகும் நிரம்பியிருந்தாள். முத்தம்மாள் பெண் வீட்டாரிடம் எங்களுக்கு மிகவும் பிடித்துள்ளது. விரைவில் என் மகனை அழைத்து வந்து தாம்பூலம் மாற்றிக் கொள்கின்றேன் என்று கூறிவிட்டு விடை பெறுகின்றார்கள். தன் மகன் அருணாசலத்தை ஊரில் இருந்து